ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1690/8 - 2011 ජනවාරි 26 වැනි බදාදා - 2011.01.26

*1690/8 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 34.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

12 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, கீழே தரப்பட்டுள்ள களிமண்ணினால் ஆன ஓடுகளை உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், களஞ்சியப்படுத்துவோர் அல்லது மொத்தமாகவோ, சில்லறையாகவோ விற்பனை செய்பவர்கள் அல்லது விற்பனைக்காக வைத்திருக்கின்றவர்கள் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்துபவர்கள் இலங்கைத் தரக் கட்டளை நிறுவனத்தினால் வழங்கப்பட்ட எஸ் எல் எஸ் (SLS) பண்டத் தரக்குறியீடு குறிக்கப்பட்டிருந்தாலன்றி, கீழே கூறப்பட்ட கூரை ஓடுகளை உற்பத்தி செய்யவோ, விநியோகிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது மொத்தமாகவோ, சில்லறையாகவோ விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக முன்வைக்கவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாது என இத்தால் பணிப்புரை விடுக்கின்றது.

1. தட்டையான கூரை ஓடுகள் - 2: 1975 (2006)
2. முகட்டு கூரை ஓடுகள் - 2: 1975 (2006)

இப்பணிப்புரை 2011 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்புரையின்படி,

ரூமி மர்சூக்,
தலைவர்.

கொழும்பு,
2011, சனவரி 25.

2- 215